RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s620

OPEN ACCESS

# தொல்காப்பியம் கற்பியலில் பண்பாடு

**இரா. தேவகி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா.

# Culture in Tholkappiyam Pedagogy

**R. Devaki** [a, *]

[a] Department of Tamil, Padmavani Arts & Science College for Women, Salem-636011, Tamil Nadu, India

* Corresponding Author: tamildevaki1984@gmail.com

Received: 29-10-2021
Revised: 14-04-2022
Accepted: 30-04-2022
Published: 17-07-2022

Check for updates

**ABSTRACT**

This study is based on messages about the culture of Tolkappiyam chastity. The manner in which the custom of marriage is handled is examined. The initiation of a faith-based phenomenon is discussed. The way of life of the individual is explained in relation to the need for social structure. The obligations of the individual are considered. The duty of the housewife is explained very minutely. The role of friends in the life of the leader/family head is explored. The characteristics of a husband in a household are to be recorded. The deeds of those who live with them forever and realise their duties are to be told so that the life of the husband and wife will be good. Civilization, Morality, Education, Career are to be explored.

**Keywords:** Pedagogy, Tolkappiyam, Education, Civilization

## முன்னுரை

தமிழர் பண்பாடு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மை வாய்ந்தது. சமூகமும் பண்பாடும் ஒன்றையொன்று பற்றிப் படர்வன. நல்லதோர் சமூகம் நல்ல நெறியை அடிப்படையாகக் கொண்டது. மனித உள்ளங்களில் பண்பட்ட உள்ளமே அம்மனித சமுதாயத்தை நல்ல வழியில் நடத்திச் சென்று தானும் வாழ்ந்து, சமுதாயத்தையும் வாழவைத்து எல்லா உயிர்களையும் இன்பத்தில் ஆழ்த்திச் சிறக்க வைக்கும். பண்டையத் தமிழர் பண்பாட்டின் நிலைக்களனாய் சிகரமாய் வாழ்ந்து சிறந்தோராவர். தனிமனித ஒழுக்கம் ஒரு நல்ல சமூகத்தை கட்டமைக்கும். பண்பாடு என்பது பண்பட்ட மனம் அல்லது பண்பட்ட மனிதப் பாங்கு என்று கூறுவர். பண்பாடு என்பது பரந்துப்பட்ட அறிவை வெளிப்படுத்துகிறது. அந்த வகையில் நம் பழமையின் சிறப்பினை எடுத்துரைக்கும் இலக்கணநூல் தொல்காப்பியம் இந்நூலில் கற்பியலில் உள்ள பண்பாட்டுக் கூறுகளை ஆராய்வதே இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும்.

## பண்பாடு குறித்த புரிதல்

பண்பாடு என்று பேசுகிறோம் ஆனால் அதன் பொருளை அறிவது அருமை, பண்படுத்திய நிலம் என்று சொல்வது போலப் பண்பட்ட மனம் என்றால் பண்பட்ட மனிதப்பாங்கு என்றும் பேசலாம். (Meenatchi Sundaranar, 2008) “பண்பாட்டையும் நாகரீகம் என்று சொல்லும் இடமும் உண்டு பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரீகம் வேண்டுபவர் என்ற குறளில் பகைவர் மனமும் நோவாத படி,

வாழும் கண்ணோட்டம் நிறைந்த பண்பாட்டையன்றோ வள்ளுவர் நாகரீகம் என்கிறார் (Meenatchi Sundaranar, 2008).

## திருமணச் சடங்கு

கற்பியலின் தொடக்கத்தில் முதல் நூற்பாவில் சிறப்பாகத் திருமணத்திற்குரிய சடங்குகளுடன் பொருந்தும் மரபுடைய மணமகன் வீட்டார், மணமகள் வீட்டார் கொடுப்பதற்குரிய மரபுபடி கொடுக்க மணமகளை பெற்றுக் கொள்வார்கள்.

“கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்

கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே” (Meenatchi Sundaranar, 2008)

என இந்நூற்பா விளக்குகிறது. பெற்றோர் இல்லாமலும் தொல்காப்பியர் காலத்தில் வதுவை நடைபெற்றது (Subramaniyan, 2010).

(எ. கா)

கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே

புணர்ந்து உடன்போகிய காலையான

உடன்போகிய காலம் கொடுப்போர் இல்லாமல் திருமணம் நடைபெற்றுள்ளது (Meenatchi Sundaranar, 2008).

## கட்டமைத்த வாழ்க்கைமுறை

அக்காலத்தில் திருமணம் என்ற சமூக ஒழுக்கம். சமூகத்தில் மேலோர் என்ற அரசர்களுக்கு உரிய சடங்குடன் திருமணம் நடைபெற்றது. இந்த திருமணச் சடங்கு கீழோர்களாகிய சாதாரண மக்களுக்கும் உரிய சடங்காக மாறியது என உள்ளது இங்கு சமூக கட்டமைப்பு ஒரு சமநிலை பேணியுள்ள பாங்கு தெரிகிறது.

“மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்

கீழோர்க்காகிய காலமும் உண்டே” (Meenatchi Sundaranar, 2008)

தொல்காப்பியர் காலத்தில் கட்டமைத்த ஒரு சமூகவாழ்க்கையை வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பதற்கு மேலே உள்ள நூற்பா சான்றாக உள்ளது (Subramaniyan, 2010).

“வெப்ஸ்டர் ஆங்கில அகராதி “சமூகப் பண்பாடு” என்பதற்கு இப்படியாக அர்த்தம் தந்துள்ளது. “மனிதர்களின் ஒரு குழுவானது கட்டமைத்த ஒரு தலைமுறையிடமிருந்து இன்னொரு தலைமுறைக்குக் கடத்திவிட்ட வாழ்க்கை முறைகளின் மொத்தத் தொகுப்பு இந்த வரையறையின் மையக்கூறு வாழ்க்கை முறைகள் என்பது மனிதர்களின் பழக்கவழக்கங்கள் நம்பிக்கைகளை உள்ளடக்கிய மிகவும் பொருள் கொண்ட சொற்கள் இவை என்பதைச் சொல்லத் தேவையில்லை. கவனிக்க வேண்டிய விஷயம் முழு உலக மாந்தரைக் குறிக்காமல் மனிதர்களின் ஒரு குழுவைச் சுட்டியிருப்பது. அடுத்த முக்கியக்கூறு அந்த குழுவானது அது உருவாக்கிய வாழ்க்கை முறைகளைத் தலைமுறை தலைமுறையாகப் பராமரித்து வருவது. இந்த மூன்று அம்சங்களும் கொண்டது தான் பண்பாடு (Arunan, 2015)

## நம்பிக்கைக்குரிய செயல்

தொல்காப்பியர் வாழ்ந்த கால சமூகத்தில் பொய் உரைத்தலும் பிழைபட நடத்தலும் இருந்துள்ளது (Subramaniyan, 2010). அதன் பின்னர் தான் தலைவர்கள் தோன்றி அவர்களின்

முன்னிலையில் திருமணத்தை நடத்தியுள்ளார்கள். இதனை,

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம் என்ப

இங்கு அதுவரை இருந்த பழைய திருமணமுறை மாறி புதியமுறை நடைமுறைக்கு வந்துள்ளது. பலர் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது என்றால் எந்த தவறும் ஏற்படாது என்ற நம்பிக்கையுடன் நடத்தியுள்ளனர் (Meenatchi Sundaranar, 2008).

பழக்கவழக்கங்கள்- நம்பிக்கைகள் என்பவை பிறப்பு, உணவு, உடை, படிப்பு, தொழில், மருத்துவம், விழா, இறப்பு சார்ந்தவை. அவை தனிமனிதரால், குடும்பத்தால் உறவுமுறைகளால் ஊரால் கடைபிடிக்கப்படுபவை (Arunan, 2015).

## தனிமனித வாழ்க்கை

தொல்காப்பியத்தில் தலைவன் கூற்று நிகழும் இடங்களில் தனிமனித ஒழுக்கம் பற்றி எடுத்துரைக்கப்படுகிறது. தலைமகளிடத்து வந்த உரிமையின் போது, நல்நெறியாகிய இல்லறம் நல்லமுறையில் தொல் நலத்துடன் நடத்தும் தலைவன் தலைவியை பலவாறு பாராட்டுகிறான். பொறுமை, பெருமை இவற்றின் ஒரே வடிவம் நீ என்கிறான். தன்னைப் போன்ற புதல்வனை எனக்கு கொடுத்தவள் என் தலைவி என தோழியிடம் கூறுகிறான்.அவனுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் தலைவியின் பங்கு குறித்து குறிப்பிடுகிறான். தலைவியிடம் அந்தணர்களிடத்தும், சான்றோர்களிடத்தும், பிறரிடத்தும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என குறிப்பிடுகிறான்.தனக்கு புதல்வன் பிறந்த பொழுது தலைவியின் தமையன் மற்றோரும் சேர்ந்து செய்த பெருஞ் சிறப்பையும் அவன் எண்ணிப் பார்க்கிறான். அத்தோடு அல்லாமல் தன்புற ஒழுக்கம் காரணமாக தலைவி ஊடலோடு இருக்கும் சமயம் அவள் கால்களை வருடி ஊடலை நீக்க முயலுகிறான் அங்கு அவன் தான் செய்த குற்றத்தை மன்னித்து ஏற்கும்படி கூறுவது தெரிகிறது. ஊடல் தீராத போது தலைவிக்கு நெருங்கிய பெண்டிர் உதவியோடு எப்படியாவது தலைவியின் ஊடலை நீக்க முயல்வது நமக்குத் தெரிகிறது.பொருள் ஈட்டுவது தலைவனின் கடமைகளில் முதன்மையானது. தலைவியை பிரிந்து செல்ல வேண்டி இருக்கும். தான் பிரிந்து பொருள் ஈட்டச் சென்றால் பிரிவு துன்பத்தைத் தாங்கமாட்டாள் என தெரியும். பொருள் ஈட்டி வர செல்வதை தான் பொருள் ஈட்டசெல்லவில்லை என பிழையாக கூறி பிரிந்து சென்றுவிடுகிறான். அதை எண்ணி அவன் வேற்றுநாட்டில், தனக்கு பொருளீட்டுவதில் ஏற்படும் வருத்தத்தின் பொழுது நினைக்கிறான். பொருளீட்டிக் கொண்டு தன் இல்லத்திற்கு வருகிறான் அப்பொழுது தன் தேரைச் செலுத்தும் பாகனிடம் விரைவாக செலுத்து என கூறுகிறான். தன் இல்லத்தில் விருந்தினரோடு நல்லதை விரும்பி தன்னை வரவேற்க மாலை ஏந்தி மனைவியும் மற்றும் சுற்றத்தினர் செய்த செயல்கள் அத்தனையும் அவன் ஏற்கிறான். இவ்வாறாக திருமணம் முடிந்ததில் இருந்து பொருளீட்டி வந்து தன் நண்பரான பாணனிடம் பேசுவதுவரை தலைவனின் கடமையாக உள்ளன.

“அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்

அந்தமில் சிறப்பின் பிறர் பிறர் திறத்தினும்

ஒழுக்கம் காட்டிய குறிப்பினும், ஒடதக்கத்துக்

விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்” (Meenatchi Sundaranar, 2008)

## தலைவியின் இல்லறக்கடமை

தொல்காப்பியர் தலைவிக் கூற்று என்றப் பகுதியில் தலைவியின் கடமைகளை சுட்டுகிறார் (Subramaniyan, 2010). தலைவனின் எண்ணங்களை அறிந்துக்கொண்டு அவனை ஏற்றுக் கொள்ளக்கூடியவள். பிறகு தனக்கு மனைவி என்ற உரிமை கொடுத்த அவனுக்கு எந்த விதத்திலும்

பெருமை குறையாக நிலையில் அன்பினை செலுத்தக் கூடியவளாக இருத்தல் வேண்டும். தலைவனுக்கு இன்பமும் துன்பமும் தன்பால் தோன்றாதபடி பார்த்துக் கொள்ளக்கூடியவளாக இருக்க வேண்டும். தனக்கு புதல்வன் பிறந்த சமயம் தன்னை விரும்பும் தலைவனை அவன் நெஞ்சு புண்படுமாறு நெருக்கத்தை விலக்குதல். புறவொழுக்கத்தில் தங்கிய தலைவன் மீண்டும் தலைவியின் அன்பை வேண்டிய பொழுது எதிர்மறுத்து நீ உன் அன்பை என் தங்கையாகிய பரத்தையிடம் இரந்து செல் என கூறுவது. தலைவன் இல்லறம் புரியும் எண்ணத்துடன் ஊடலைப் போக்க விரும்பிய பொழுது, தந்தையைப் போன்றவன் மகன் என பழித்துக் கூறுவது போன்று கூறும் பொழுதும் கொடுமையுடையோர் கொடுமை அவரையே பின்னர் சுடும் என்ற பழமொழியை மனதில் கொண்டு கூறும் பொழுதும் தலைவி கூற்று நிகழ்த்துவாள்.

“கொடியோர் கொடுமை சுடுமென ஒடியாது

நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப்”

தலைவன் புகழை விரும்புவார்களோடு தானும் சேர்ந்து நின்ற தகுதியின் பொழுதும் பெருமிதத்துடன் இருப்பான். தலைவன் நான் உன்னை பிரியமாட்டேன் என முன்பு சூள்ளுரைத் தான் இப்பொழுது பிரிந்து சென்று விட்டான் என நினைத்துப் பார்த்தல். தலைவனின் புற ஒழுக்கத்தை தோழி கூறிய எல்லாவற்றையும் கேட்டு தன் கற்பினின்றும் திரியாது, சினந்தும், மகிழ்ந்தும், பிரிந்தும், விரும்பியும், தலைவன் செய்கின்ற செயலுக்கு அஞ்சுகின்ற அச்சம் அவளிடம் இருக்கும். இவ்வாறாக தலைவியின் வாழ்க்கை உள்ளது (Meenatchi Sundaranar, 2008).

## தோழிக்குரிய கடமை

தலைவன், தலைவியின் இல்வாழ்க்கையில் மிகவும் முக்கிய பங்கு வகிப்பவள் தோழி. திருமணம் முடிந்த பின்பு இருவரிடமும் தெளிவுப் படுத்த வேண்டிய இடங்களில் தெளிவுப்படுத்துவது தோழியின் கடமை. தலைவியிடம் தெய்வத்தை வாழ்த்தி வணங்கச் சொல்வது இல்லற வாழ்க்கையில் தலைவன் தன் கடமையை மறந்தபொழுது ஞாபகப் படுத்த வைப்பது இருவரும் மனம் வருந்திய பொழுது வருத்தத்தை போக்குதல் பரத்தையிடம் சென்று வந்த தலைவனை நெருங்கிய தலைவி தன் அன்பிற்குரியவனாக ஆக்கிக் கொள்வதற்காக வழிகளை எடுத்தியம்புவது தலைவன் தலைவி இருவரையும் பணிவால் வணங்குவது. புதல்வன் வழி ஊடலை தீர்க்க முயன்ற தலைவனை தலைவி ஏற்காத போது தலைவியின் மாண்புடைய நலத்தினை இடித்துரைத்தற் கண்ணும் நல்லவைகளை எடுத்துரைப்பாள் தோழி.

## தலைவியின் இல்லற பண்பாடு

தலைவன் மீது மாறாத அன்பு, நன்றியால் ஒழுகும் ஒழுக்கம், மென்மையான தன்மை, பிறரைப் பொறுக்கும் தன்மை, ஒளிவு மறைவு இல்லாத தன்மை, சமையல் தொழிலின் வல்லமையால் விருந்தினரை பாதுகாத்தல், சுற்றத்தாரைக் காத்தல் இவை தலைவியின் பண்புகள். இவற்றை எல்லாம் அவள் முகம் மகிழ்ந்து கேட்கும் நிலையில் தலைவனிடம் உரைப்பார் .தலைவனின் தோழனாகிய பாணர்.

## செவிலிக்குரிய கூற்று

தலைவன், தலைவிக்கு இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம் என்ற மூன்று காலத்திலும் வழிவழியாக வரும் நல்லவற்றை உணர்த்தலும், தீயவற்றை விலக்கலும் செவிலிக்குரியவை.இல்லற வாழ்க்கை வாழும் தலைவன் தலைவி இருவரும் தெரிந்து கூறும் எல்லையில் இருந்தாலும், அவர்கள் வாழ்க்கையில் பிழைகள் கண்டவழி இடித்துரைத்தல் அறிவுடையர் செயலாகும்.

“சொல்லிய கிளவி அறிவர்க்கும் உரிய

இடித்துவரை நிறுத்தலும் அவரதாகும்

கிழவனும் கிழத்தியும் அவர்வரை நிற்றலின்" (Meenatchi Sundaranar, 2008)

## உணர்வுக்கு மதிப்பு கொடுத்தல்

மனைவியின் முன்னால் தலைவனின் புறத்தொழுக்கம் போன்ற கொடுமைச் செய்திகளை கூறாது இருத்தல், சிறந்த செயற்கரிய செயலுடைய சொற்களைச் சொல்லுதல், உள்ள உறுதியை அதிகப்படுத்துதல், முன்னிலையில் இருப்பவர்களை படர்க்கையில் இருப்பவர் போல பேசுவது வாயில்களுக்கு உரியவை.

## கூத்தர்க்குரிய செயல்

"தொல்லவை உரைத்தலும் நுகர்ச்சி ஏத்தலும்

பல்லாற்றானும் ஊடலின் தணித்தலும்

உறுதி காட்டலும், அறிவு மெய் நிறுத்தலும்" (Meenatchi Sundaranar, 2008)

முன்னோர் வரலாறு எடுத்துரைத்தல், மனைவாழ்க்கை முறைகளை புகழ்தல், தலைவன் தலைவியின் ஊடலை நீக்குதல், வாழ்க்கை உறுதிகளைக் காட்டல், காரண காரியங்களோடு உணர்த்தலும் உறுதிப்படுத்தல் அழகுநிலையை உணர்த்தல், இவை எல்லாவற்றையும் தலைவன் இருக்கும் இடம் சென்று அங்கு தலைவியின் நிலைமை உரைத்தல் கூத்தர், பாணர்க்கும் உரியவை, இங்கு ஒழுக்கம் மிகவும் சிறப்பாக எடுத்துரைக்கப்படுகிறது (Arulsheeli, 2012).

"சமூக நிறுவனங்களின் ஒழுக்க நெறியும் பண்பாட்டின் விளக்கமே ஆகும். தமிழ் நாட்டில் ஒழுக்கத்தை வற்புறுத்தும் நூல்கள் இலக்கியமாகவும் சிறந்து விளங்குகின்றன (Rasamanikkam, 2015).

## நாகரீகம்

தோழி முதலானோர் வாயிலாக அமைவர், தலைவன் தலைவி இருவரிடத்தும் பொருந்திய மகிழ்ச்சியே இவர் குறிக்கோளாக அமையும். அன்பு நீங்கிய கடுஞ்சொற்களை வாயிலோர் கூற நேர்ந்தால் நேர் நின்று கூறாது சிறைப்புறமாகக் கூறும் குறிப்புடையவர்கள் இவர்கள் எனக் கூறுவர் அறிவுடையோர். பண்பாடு என்ற சொல்லுக்கு மிக நெருக்கமான சொல்லாக கூடவே நடந்து வரும் சொல்லாக இருப்பது நாகரிகம் என்ற சொல் (Arunan, 2015).

## குழந்தைப்பேறு

தலைவிக்குப் பூப்புத் தோன்றிய 12 நாட்கள் அவளைப் பிரிந்து தங்குதல் இல்லை எனக் கூறுவர் அறிவுடையோர். பரத்தையிடம் பிரிந்த காலத்தும் இது நிகழும்.

"பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்

நீத்து அகன்று வரையார் என்மனார் புலவர்

பரத்தையின் பிரிந்த காலையான"

குழந்தைபேற்றின் அவசியத்தை இந்நூற்பா விளக்குகிறது (Meenatchi Sundaranar, 2008). மேலும் "வாழ்வின் பல பல போக்குகள் அமைந்த பல்வேறு நிலைகளையும் இந்தப் பண்பாடென்பது குறிக்கும், உடலைப் பற்றிய நன்னிலை, மனத்தைப் பற்றிய தூய்மைநிலையான, பேச்சின் இனிமை இவையெல்லாம் பண்பாட்டில் அடங்கும் (Rasamanikkam, 2015).

இல்லற வாழ்க்கையின் இறுதிக் காலத்து பெருமை பொருந்திய மக்களுடன் நிறைந்து, அறத்தினை விரும்பிய சுற்றத்தோடு தலைவனும் தலைவியும் சிறந்ததாகிய செம்பொருளை இடைவிடாது எண்ணிப்பார்த்தல் மனையறத்தின் கடந்த கால பயனாகும் (Meenatchi Sundaranar, 2008)

"எண்ணம் தூய்மையாக இருக்க வேண்டுமானால் எண்ணத்தின் எழுச்சிகளும் நிலைக்களனாக உள்ள மனம் மாசு இல்லாததாக இருக்க வேண்டும். மனம் மாசற்றுத் தூய்மையாக இருக்கும் நிலையே அறம் எனப்படும் (Arunan, 2015).

## படிப்பு தொழில்

ஒருவன் கல்வி கற்பதற்காக தன் குடும்பத்தை விட்டுபிரியும் பிரிவு மூன்று ஆண்டுகளுக்கு மேல் செல்லாது. அதேப்போல அரசனுக்காக பகைவர் நாட்டிற்கு தூதுச் செல்ல பிரியும் பிரிவு ஓராண்டிற்குள் நடைபெறும் இதற்கு மேல் செல்லாது. தன் இல்வாழ்க்கையை சீரும் சிறப்பாக நடத்த பொருள் தேவை அந்த பொருளை ஈட்டுவதற்காகச் செல்லும் பிரிவு ஒருவருடத்திற்கு மேல் செல்லாது என்கிறது தொல்காப்பியம் (Subramaniyan, 2010). இவர் ஒவ்வொரு செயலுக்கான கால அளவை குறிப்பிட்டுள்ளதைக் காணும் பொழுது ஒரு பண்பட்ட வாழ்க்கை முறையை வாழ்ந்துள்ளார்கள் என்பது தெளிவாக தெரிகிறது.

"வேண்டிய கல்வி யாண்டு மூன்று இறவாது

வேந்துறு தொழிலே யாண்டினது அகமே

ஏனைய பிரிவும் அவ்வயின் நிலையும்"

மேலே உள்ள கருத்துக்குச் சான்றாக இந்நூற்பா அமைகிறது (Meenatchi Sundaranar, 2008).

"கல்வி என்பது மக்கள் அறிய வேண்டியதை அறியக் கூடிய பக்குவமும் பயிற்சியுமாகும். கல்விக்கு உட்கருவி மனம் ஆகும்.புறக்கருவி கண்ணாகும் உட்கருவி, புறக்கருவி இரண்டும் ஒருங்கிணைந்து கருத்தை காட்டுதலே அறிவுத்திறன் என்பது. இப்பயிற்சியின் மூலம் கல்வி கற்பதனால் மனித அறிவு வளர்ச்சி பெறுகின்றது.இத்தகைய அறிய வளர்ச்சியைத்தான் கல்வி என்கின்றோம் (Rasamanikkam, 2015).

## முடிவுரை

மணமக்களை இருபெரும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றுகூடி நடத்தி வைக்கிறார்கள். தலைவனுக்கான கடமை குறித்து விவாதிக்கப்பட்டு புரிய வைக்கப்படுகிறது. வீட்டின் ஆணிவேர் போன்ற தலைவி எந்த வகையான இடர்பாடுகள் வந்த பொழுதும் அஞ்சா நெஞ்ச ஆற்றல் உடையவளாக காட்டப்படுகிறது. இல்வாழ்க்கை என்னும் பக்கத்தில் இணையும் இரு உள்ளங்களுக்கு நல்லது, கெட்டது என்பதை அவர்கள் வயதுடையவர்கள் எடுத்துரைப்பது சாலச் சிறந்தது என்ற வகையில் தோழியின் செயல் உள்ளது. இருவர்கான வாழ்க்கை நெறி எடுத்தியம்பப்படுகிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள உள்உணர்வுகளுக்கு மிகச் சிறப்பாக மரியாதை கொடுக்கப்படுவதை அறியமுடிகிறது. யார், எதை எடுத்தியம்பக் கூடியவர்கள் எந்த விஷயத்தை யார் கூறினால் சரியாக இருக்கும் என்பதை உற்றுநோக்கி அவர்கள் வழியாக தலைவன், தலைவிக்கு உரிய நேரத்தில் எடுத்துரைக்கப்பட்டு அவர்கள் வாழ்க்கை நன்முறையில் அமைய அனைவரின் பங்கு உரியதாக இருப்பதை தொல்காப்பியத்தில் காணமுடிகிறது. ஒட்டுமொத்தமாக கற்பியலை ஆய்வு செய்யும் பொழுது மிகச் சிறந்த நாகரீகம் வாய்ந்த பண்பட்ட சமூகம் இருந்துள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. அப்படிஇல்லை என்றால் ஒரு நல்ல சமுதாயம் எந்த வகையில் அமைய வேண்டும் என்ற நெறிகளை இந்த தலைவன் தலைவி வாயிலாக உலகத்திற்கு எடுத்துக்காட்டப் படைக்கப்பட்டுள்ளது என்பது திண்ணம். மனிதனின் உள்ள உணர்வு மிகவும் சிறப்பாக மதிக்கப்பட்டு பேணப்பட்டுள்ளது. இப்படிபட்ட பழம்பெரும் சமூகத்தில் பிறந்த நாம் நம் பாரம்பரியத்தை மறந்து மனித உணர்வுகளை

மதிக்காமல் இருக்கக்கூடிய இளைய சமுதாயத்தினரை காணும்பொழுது மனம் மிகவும் வருந்துகிறது. நம் பண்பாட்டை பேண தொல்காப்பியர் நெறியை பின்பற்றுவோம்.

## References

Arulsheeli, A., (2012) Urainadai Thoguppu, New Century Book House Pvt Ltd, Chennai, India.

Arunan, (2015) Panpattu Veli Panmuga Paarvai, Katturai Thoguppu, Bharathi Puthagalayam, Chennai, India.

Meenatchi Sundaranar, T.P., (2008) Tamilum Pira Panpadum, Mullai nilaiyam, Chennai, India.

Rasamanikkam, K., (2015) Pandai Tamilar Valviyal, Tamil Kudil Pathippagam, Salem, India.

Subramaniyan, S, V., (2010) Tholkappiyam Thelivurai, Manivasakar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License